# இழந்து போகப்பட்டிருந்த ஒரு நல்ல மனிதர்! (10:24-48; 11:12-18)

அப். 10ல் கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் ஆகியோரின் மனமாற்றம் பற்றிக் கூறப்படுகின்றது. இந்த நிகழ்ச்சிக்கு (வேறு எந்த மனமாற்ற நிகழ்ச்சிக்குக் கொடுக்கப் பட்டுள்ளதைக் காட்டிலும் அதிகமாக) கொடுக்கப்பட்டுள்ள இடமே (வசனங்கள்) இதன் முக்கியத்துவத்தைக் காட்டு கின்றது. மேலும் இந்த வரலாறு மிக விபரமாக இரண்டாவது முறை திரும்பத் திரும்பக் கூறப்படுவதிலும் இதன் முக்கியத் துவம் காட்டப்படுகின்றது.

இது ஒரு நல்ல மனிதரின் மனமாற்றம் என்பதுதான் மிகவும் ஆச்சரியமான உண்மையாகும்! மரித்த N.B. ஹார்டுமேன் அவர்கள் தயார் செய்த "கொர்நேலியு நம்மை வெட்கமடையச் செய்கின்றார்" என்ற தலைப்புள்ள பிரசங்கத்தில், கொர்நேலியு கிறிஸ்தவராவதற்கு முன்னதாகவே, நம்மில் அநேகரைப் பார்க்கிலும் சிறந்தவராய் இருந்தார் என்ற கருத்தைச் சுட்டிக்காட்டினார்! C. புரூஸ் ஒயிட் அவர்கள் கொர்நேலியு வின் ஐந்து பண்புகளை வலியுறுத்தினார்: (1) அவர் பக்தியுள்ள ஒரு சீஷராய் இருந்தார். அவர் ''தேவபக்தியுள்ள ஒரு மனிதராய்'' மற்றும் ''நீதியும் தேவபயமும் உள்ள ஒரு மனிதராய்" இருந்தார். நேர்மையற்ற உலகத்தில் அவர் ஒரு நேர்மையாளராய் இருந்தார்.[1] (2) அவர் உண்மையுள்ள ஒரு தகப்பனாயிருந்தார். அவர் தமது வீட்டார் யாவருக்கும் போதித்தார் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; அவர்கள் யாவரும் மெய்யான தேவனை விசுவாசித்தார்கள் (யோசு. 24:15; எபே. 6:4 ஆகியவற்றைக் கவனிக்கவும்). (3) அவர் தாராள மனப்பான்மையுள்ள ஒரு புறஜாதியாராயிருந்தார். அவர் ஏழை ஜனங்களுக்கு "மிகுந்த தருமங்களை [தரும கொடைகளை]"

செய்து வந்தார். (4) ஜெபம் செய்து, எதிர்நோக்குபவரா யிருந்தார். அவர் "எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்.'' மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், (5) அவர் நன்மதிப்புள்ள ஒரு ரோமரா யிருந்தார். அவர் "யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவராயிருந்தார்." பொதுவாகவே யூதர்கள், ரோமப் படை வீரர்களை வெறுத்தார்கள், ஆனால் தேவ பயமுள்ள கொர்நேலியுவின் விஷயத்தில் அவர்கள் ஒரு விதிவிலக்கை மேற்கொண்டனர். மற்ற பண்புகளும் (அவர் தாழ்மையுடன் கேட்பவராயிருந்தார், முதலியன) கூடக் கூறப்பட முடியும். சந்தேகமின்றி, அவர் ஒரு மிகச் சிறந்த நபராக இருந்தார்.

ஆனாலும் கூட, கொர்நேலியு இழந்து போகப்பட்ட நிலையில் இருந்தார். தூதன் அவரிடம் பேதுருவுக்கு ஆளனுப்பி அழைப்பிக்கும்படியும், "நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் (பேதுரு) உனக்குச் சொல்லுவான்" (11:14) என்றும் கூறினார். எந்த ஒரு நபரும் தனது நற்செயல்களினால் இரட்சிக்கப்பட்டு விட முடியாது என்பதற்குக் கொர்நேலியு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றார். உயிர்வாழ்பவர்களிலேயே மிகவும் அதிகமான தேவபக்தியுள்ளவரும் கூட இன்னமும் பாவியாக இருக்கிறார், அவருக்கு இரட்சிப்பு தேவைப்படுகின்றது (ரோமர் 3:23; 6:23)! தேவன் மற்றும் அவருடைய அளவீட்டுத் தரங்களுடன் ஒப்பிடுகையில், "நமது நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" (ஏசா. 64:6), கிறிஸ்துவின் இரத்தமில்லாமல் இரட்சிப்பு இல்லை (எபி. 9:22)! கொர்நேலியு மற்றும் அவரது வீட்டாருக்குக் கிறிஸ்துவின் இரத்தம் தேவைப்பட்டது - நமக்கும் அது தேவை.

இந்த நல்ல மனிதரின் மனமாற்றத்தைப் பற்றிய பாடத்தை நாம் தொடருவோம். தடைகளை இடித்துத் தகர்த்தல் என்பது சுலபமாயிருக்கவில்லை என்பதை நாம் முன்னமே கவனித் தோம். யூதர் மற்றும் புறஜாதியாரை ஒன்றாக்க தேவன் எப்படி மறுபடி மறுபடி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது என்பதை நாம் பார்த்தோம். வேறு எந்த மனமாற்ற நிகழ்ச்சி யைக் காட்டிலும், இதில் அற்புத நிகழ்ச்சிகள் வெகுவாய்க் காணப்படுகின்றன. இதன் விளைவாக, அப். நட. புத்தகத்தில் உள்ளவைகளிலேயே இம்மனமாற்ற நிகழ்ச்சியே அதிகம்

தவறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடியதாக இருக்கின்றது. பல பொதுவான கேள்விகளுக்கு இப்பாடத்தில் விடை அளிக்கப் படும் என்று நான் நம்புகின்றேன்.

## ஒரு நல்ல மனிதர் பிரசங்கியாருக்காகக் காத்திருக்கின்றார் (10:24-27)

நமது முந்திய பாடத்தின் முடிவில், பேதுரு, அவர் தேர்ந்து கொண்ட ஆறு யூதக் கிறிஸ்தவர்கள் மற்றும் கொர்நேலியுவின் செய்தியாளர்கள் மூன்று பேர் ஆக மொத்தம் பத்து மனிதர்கள் யோப்பாவிலிருந்து வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இரவில் அவர்கள் வழியில் எங்கோ தங்கியிருந்து, பின்னர் ‘‘மறுநாளிலே [அவர்கள்] செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள்’’ (10:24அ), அதுவே அவர்கள் சென்றடைய வேண்டிய இடமாயிருந்தது.

பேதுருவுக்கு ஆளனுப்பும்படி தூதன் கொர்நேலியுவுக்குத் கட்டளையிட்டிருந்ததால், அப்போஸ்தலர் வந்து சேர்ந்து விடுவார் என்பதில் அந்த நூற்றுக்கு அதிபதி அதிக நிச்சயமாயிருந்தார். இவ்விதமாக, “கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூட வரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான்’’ (வ. 24ஆ). பயணத்திற்கு எவ்வளவு நேரமாகும் என்பதைக் கொர்நேலியு முன்னதாகவே அனுமானம் செய்து, அவர்கள் திரும்பும் நேரம் என்று தான் எதிர்பார்த்திருந்த தோராயமான நேரத்திலே தமது நண்பர்கள், உறவினர்களைக் கூடிவரச் செய்தாரா? அல்லது பேதுருவுடன் பயணம் செய்த ஊழியக்காரர்களில் ஒருவர் முன்னதாக ஓடிச் சென்று கொர்நேலியு கூட்டத்தாரை யெல்லாம் ஒன்று சேர்க்க அவகாசம் கொடுத்தாரா? நாம் இதை அறியவில்லை, ஆனால் கொர்நேலியுவின் வேண்டுகோளை அவரது நண்பர்களும், வீட்டாரும் ஏற்றுக்கொண்டு பதில் செயல் செய்த நிகழ்ச்சியானது, அந்த நூற்றுக்கு அதிபதி செல்வாக்கு மிக்க ஒரு அழைப்பாளராய் இருந்தார் என்று அவரது மற்றொரு தனிச் சிறப்பான பண்பை வெளிப் படுத்துகின்றது.

கொர்நேலியு, அப்போஸ்தலரைச் சந்திக்கும்படி வெளியே போகாமல், உள்ளேயே காத்திருந்தார், அநேகமாக அவர்

அப்போது, யூதராகிய பேதுரு தமது வீட்டிற்குள் வருவாரா என்று ஆச்சரியப்பட்டிருந்திருப்பார். புறஜாதியாரின் கட்டிடங் களுக்குள் நுழைவது தங்களை சடங்காச்சாரத்தில் தீட்டுப் படுத்தும் என்று யூதர்கள் நம்பியிருந்தார்கள் (வ. 28; இ.வ. யோவா. 18:28). ஆயினும் பேதுரு ஒரு முற்றத்தில் பிரசங்கம் செய்வதற்காக இவ்வளவு தூரம் வந்திருக்கவில்லை. கொர் நேலியுவின் வீட்டின் முன்கதவைப் பேதுரு கடந்து தைரியமாய் உள்ளே நடந்து சென்ற போது, தப்பெண்ணம் என்ற சுவரினைத் தரைமட்டமாக இடித்துத் தள்ளும் பணியில் இன்னொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்குள் பிரவேசித்தபோது, கொர்நேலியு திக்குமுக்காடிப் போனார். அவர் அப்போஸ் தலரைச் சந்திக்கும்படி விரைந்து, "அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான்" (வ. 25). "பணிந்து" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "சிருஷ்டிக்கோ அல்லது சிருஷ்டிகருக்கோ செலுத்தப்படுகின்ற பயபக்தியான செயல்பாட்டினை"க் குறிப்பதாக இருக்கின்றது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட செய்தியாளராக இருந்த பேதுரு வுக்கு கொர்நேலியு தமது மரியாதையைக் காண்பிக்க மட்டுமே விரும்பியிருக்கலாம். ஒரு ரோமப்படை வீரர் ஒரு யூதருக்கு முன்பாகப் பணிந்து கொள்வது என்பது வெற்றியாளர் ஒருவர் தாம் வெற்றி கொண்டவர் முன்பு பணிந்து கொள்வதென்ற திகைப்பான காட்சியாகும். தடைகள் யாவும் நடுங்கத் தொடங்கின!

அந்த நூற்றுக்கு அதிபதியின் நோக்கம் எதுவாயிருப்பினும், ஒரு தவறான மனப்பாங்கை விட்டு வைத்து விடப் பேதுரு விரும்பவில்லை.[2] தேவன் ஒருவரே ஆராதிக்கப்பட வேண்டிய வர்! (மத். 4:10; 1 கொரி. 8:4, 6 ஆகியவற்றைக் காணவும்.) விரைவாகப் பேதுரு கொர்நேலியுவைத் தூக்கியெடுத்து, "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான்" (வ. 26) என்றார். பேதுருவின் வழி வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர் களின் செயல்கள் எவ்வளவு முரண்பாடாயிருக்கின்றன! அவர்கள் தங்களை மக்கள் பணிந்து கொள்ளும்படி அனுமதித்து, மோதிர மணிந்த தங்கள் விரல்களை முத்தமிடும்படி நீட்டுகின்றனர்.[3] இந்நிகழ்ச்சியைப் பற்றி ஒரு சகோதரர் பின்வருமாறு எழுதினார்:

மெம்பிஸ் [டென்னெஸே] நகரத்தில் உள்ள ஹார்டிங் மார்க்கவியல் பட்டப்பள்ளியின் முன்னாள் தலைவரான சகோதரர் W.B. வெஸ்ட் அவர்கள் ஒருமுறை (மற்றுமிருந்த நூற்றுக்காணக்கான மக்களுடன்) "பரிசுத்த தந்தையை"க் காண வாய்ப்புப் பெற்றிருந்தார். போப் அந்த அறைக்குள் வந்தபோது அங்கிருந்த அனைவரும் முழங்கால் படியிட்டனர் என்று அவர் (வெஸ்ட்) கூறினார். அவரும் கூட அவ்வாறு செய்யப் போகையில் பேதுரு கொர்நேலியுவுக்குக் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. மரியாதையற்றவராயிருக்க அவர் விரும்பவில்லையென்றாலும், அவர் நேராய் நின்று கொண்டிருந்தார்.

பேதுருவும் கொர்நேலியுவும், அந்த நூற்றுக்கு அதிபதியின் வீட்டிற்குள்ளாக நடந்து செல்லுகையில் (வ. 27அ) அவர்கள் சமமானவர்கள் போலவே பேசிக் கொண்டு ஒன்றாய்ச் சென்றனர். கொர்நேலியுவின் நண்பர்களும், வீட்டாரும் காத்திருந்த அறைக்குள் அவர்கள் சென்றபோது, அப்போஸ் தலர் நிச்சயமாகவே திகைத்துப் போயிருந்திருப்பார். அநேகமாய் அவர், கொர்நேலியுவின் சொந்தக் குடும்பத்தாரும் அவரது வீட்டு வேலையாட்களும் மட்டுமே அங்கிருப்பார்கள் என்று எதிர்பார்த்திருப்பார். ஆனால் அதற்கு மாறாக, அவர், "அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டார்" (வ. 27ஆ). பேதுரு அநேகமாய் என்ன பார்த்திருப்பார் என்பதை பெர்னாட் R. யங்மன் என்ற எழுத்தாளர் பின்வருமாறு சித்தரித்தார்:

அவர் சுற்றிலும் பார்த்தார், அறை முழுவதும் சலவைக் கற்கள் மற்றும் சித்திரக் கற்களினால் தரை பாவப்பட்டு, ரோமானிய மேஜைகள் மற்றும் மெத்தை இருக்கைகள் போடப்பட்டி ருந்தன, அறையைச் சுற்றிலும் பட்டுத் திரைகள் தொங்கின. ரோமானிய தோகா மற்றும் கவுன் அணிந்த ஆண்கள் மற்றும் பெண்கள், படை வீரர்கள் தங்களின் பல்வேறு பதவிகளுக் குரிய உடைகளில் பளபளப்பாகத் தெரிந்தனர், அடிமைகள் கதவிடுக்குகளின் வழியே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ...

மூன்று நாட்களுக்கு முன்னதாக, இப்படித் தாம் இவ்வளவு விரைவில் புறஜாதியார் ஒருவருடைய கூரையினடியில், இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தார் சூழ நிற்பதென்பது நடை பெறவே முடியாத செயல் என்று பேதுரு நினைத்திருப்பார், ஆனால் அங்கு அவர் நின்றார்! இந்த மூன்று நாட்களில் பேதுருவின் வாழ்விலும், பேதுருவின் இருதயத்திலும்

அதிகமான செயல்கள் நடைபெற்றிருந்தன!

## ஒரு நல்ல மனிதர் சுவிசேஷத்தைக் கேட்கின்றார் (10:28-43)

அங்கே கூடியிருந்தவர்களிடத்தில் அப்போஸ்தலர் பேசினார்:[4] "அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்கு வரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்" (வ. 28). "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" (10:15) என்று அந்த சத்தம் கூறியபோது உணவுதான் கருப்பொருளாயிருந்தது. ஆயினும், தொடர்ந்து வந்த மூன்று நாட்களில் பேதுரு, "நான் எந்த மனிதரையும் தீட்டுள்ளவர் அல்லது அசுத்தமானவர் என்று அழைக்கக் கூடாது என்பதை தேவன் எனக்குக் காண்பித்திருக்கின்றார்" என்பதை நடைமுறைப் படுத்தியிருந்தார்.

பேதுரு தொடர்ந்து: "ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர் பேசாமல் வந்தேன்" (வ. 29அ) என்று கூறினார். அசுத்தமான மிருகங்களை அடித்துப் புசிப்பது பற்றிப் பேதுரு ஆரம்பத்தில் மறுப்பு தெரிவித்தார், ஆனால் மூன்று முறை அவர் பெற்ற தரிசனமும், செய்தியாளர்களுடன் புறப்பட்டுச் செல்லும்படியான நேரடியான கட்டளையும் அவர் பெற்ற பிறகு, பேதுரு வேறு எந்த மறுப்பையும் தெரிவிக்கவில்லை. "இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன்" என்றார் (வ. 29ஆ).

தூதன் தரிசனமானதைப் பற்றிக் கொர்நேலியு கூறினார்: "அதற்குக் கொர்நேலியு: நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று" (வ. 30). பரலோகத்தின் செய்தியாளருடைய அறிவுரையை மேற்கோள் காட்டிய கொர்நேலியு, "அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்

*பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்'' என்று முடித்தார் (வ. 33). அவர்கள் புறஜாதியாராயிருக்கலாம், ஆனால் ஒரு பிரசங்கியாரின் கனவின் நனவாக அவர்கள் இருந்தார்கள்: கடமைக்காகவோ அல்லது வழக்கமாகவோ, சந்திப்பிற்காகவோ அல்லது களிப்படைவதற்கோ அவர்கள் கூடி வந்திருக்கவில்லை, ஆனால் தேவன் கட்டளையிட்ட யாவை யும் கேட்பதற்காகவே அவர்கள் கூடி வந்திருந்தார்கள்.*

*பேதுருவின் மனதில் இது ஆழப்பதிந்தது. "அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி, தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" (வ. 34, 35). "பட்சபாத முள்ளவ'' ரென்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "முகம்" மற்றும் "ஏற்றுக் கொள்ளுதல்" என்ற அர்த்தங் கொள்ளும் இரண்டு வார்த்தைகள் சேர்ந்த கூட்டு வார்த்தையாகும். இதன் நேரடியான அர்த்தம்: ஒருவரது முகத்தை மட்டுமே பார்த்து, அதாவது இயல்புகளை மேம் போக்காக மட்டும் பார்த்து அவரை ஏற்றுக் கொள்ளுதல் (அல்லது மறுத்தல்) ஆகும். [தேவன் இவ்வித பட்சபாதமுள்ள வரல்ல என்று கூறப்பட்டுள்ளது.] இனம், வாழ்க்கை நிலை அல்லது உடைமைகள் ஆகியவற்றைப் போன்ற மேம்போக் கான இயல்புகளின் அடிப்படையில் எந்த ஒரு தனிநபரையும் தேவன் நியாயந் தீர்ப்பதில்லை (1 பேது. 1:17). மாறாக தேவன் ஒவ்வொரு நபரின் இருதயம் மற்றும் வாழ்க்கை ஆகியவற்றை நோக்குகின்றார்! ''எந்த ஜனத்திலாயினும் [ஒவ்வொரு தேசத்திலும்] அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன்/ செய்கிறவள் (ஆமோ. 5:15; மீகா. 6:8) எவனோ/எவளோ, அவனே/அவளே அவருக்கு உகந்தவன்/உகந்தவள்!"*

*நம்மில் பலர், இந்த வசனங்களில் இருக்கின்ற அதிசயங்கள் நம்மை விட்டுத் தப்பிச் சென்று விடுமளவுக்கு இவற்றை அடிக்கடி கேட்டிருக்கின்றோம். இயேசு சவுலுக்குத் தரிசன மானது எவ்விதமாயிருந்ததோ அவ்விதமாகவே - இந்தச் சத்தியத்தை உணருதல் என்ற செயலானது, பேதுருவுக்கு சிந்தனையில் தயக்கத்தையும், வாழ்க்கையில் மாற்றத்தையும் கொடுப்பதாயிருந்தது! தேவன் எல்லா மனிதர்களையும்*

உங்களையும் என்னையும் உட்பட அனைவரையும் - வரவேற்கின்றார்!

யூத கிறிஸ்தவர்கள் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ளும்படி தயாரித்தல் என்று அடுத்த நடவடிக்கைக்கான நேரம் வந்தது: முதன்முறையாக சுவிசேஷமானது யூதரல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பேதுரு, "இராஜ்யத் தின் திறவுகோல்களை" (மத். 16:19) மறுபடியும் பயன்படுத்த வேண்டியதாயிருந்தது. வசனம் 36 முதல் 43 வரையுள்ள பகுதியானது பேதுருவின் பிரசங்கத்தினுடைய சுருக்கமான கூற்றை நமக்குத் தருகின்றது. இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியங்கள் பற்றிய புறக்குறிப்புடன் பேதுரு தொடங்கினார்:

> எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக் கிறீர்களே.[5] யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்த பின்பு, கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினா லும் அபிஷேகம் பண்ணினார்;[6] தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே[7] அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில்[8] அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிற வராயும் சுற்றித் திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (வ. 36-39அ).

பிறகு பேதுரு இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிப் பேசுகையில் சுவிசேஷத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்கே சென்றார்.

> அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும் படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட் சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும்[9] தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார் (வ. 39ஆ-41).

பேதுரு தமது பிரசங்கத்தை முடிக்கத் தொடங்கினார்:

> அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்

*களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயதிபதியென்று[10] ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள்'' என்றான் (வ. 42, 43).*

பேதுரு தமது உரையைக் கேட்டவர்கள் என்ன செய்ய வேண்டியது தேவை என்று கூறத் தயாராகி (இ.வ. அப். 2:38; 10:48) தமது புத்திமதிகளைக் கூறத் தொடங்கிய (இ.வ. 2:40) வேளையில், அவரது பிரசங்கமானது இடைமறிக்கப்பட்டது. பேதுரு தமது பிரசங்கங்களை முற்றிலும் முடிப்பது என்பது கடினமானதாகவே இருந்திருக்கின்றது. பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்களுக்கு அவர் பிரசங்கிக்கையில், மனச்சாட்சியில் குத்தப்பட்ட பாவிகளால் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கப்பட்டு அவரது பிரசங்கமானது இடைமறிக்கப் பட்டது (2:37). சப்பாணியான பிச்சைக்காரன் குணப்படுத்தப் பட்ட பிறகு அவர் பிரசங்கிக்கையில், அவரைக் கைது செய்ய வந்தவர்களால் அவரது பிரசங்கமானது இடைமறிக்கப்பட்டது (4:1-3). இந்த முறை அவரது பிரசங்கமானது தேவனால் இடைமறிக்கப்பட்டது.

## ஒரு நல்ல மனிதர் ஆவியானவரைப் பெறுகின்றார் (10:44-46; 11:15-17)

யூதக் கிறிஸ்தவர்கள் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ளும்படி நம்ப வைக்கும் மிக முக்கியமான நடவடிக்கைக்கு இதுவே ஏற்ற வேளையாயிற்று. கொர்நேலியுவையும் பேதுருவையும் தயார் செய்வதற்கு தேவன் அற்புத வல்லமையைப் பயன்படுத்தியது போலவே, சபையாரைத் தயார் செய்யவும் அவர் மறுபடியும் தமது வல்லமைகளைப் பயன்படுத்தினார்.

*இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கை யில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்[11] பேதுருவோடு கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்*

போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந் தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள் (10:44-46).

"பரிசுத்த ஆவியின் வரம்" என்ற சொற்றொடரானது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்த வரத்தையோ அல்லது பரிசுத்த ஆவியானவரையே வரமாய்ப் பெற்றுக் கொண்டதையோ குறிப்பிட முடியும். 2:38ல் இது பரிசுத்த ஆவியானவரையே ஒரு வரமாகக் குறிப்பிட்டது. இந்த வசனப் பகுதியில் இது பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து வருகின்ற ஒரு விசேஷித்த வரமாக, குறிப்பாக, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிப்பதாயிருக்கின்றது. என்ன நடந்தது என்பது பற்றிய பேதுருவின் விளக்கத்தை அதிகாரம் 11ல் படிப்பதன் மூலம் நாம் இதை அறிகின்றோம்:

நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான் (11:15-17).

இவ்வசனப் பகுதியில் "நம்மேல்" என்பது அப்போஸ்தலர்களைக் குறிப்பிடுகின்றது. "நீங்கள் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" என்று அப்போஸ்தலர்களுக்குத்தான் கர்த்தர் கூறியிருந்தார் (1:2-5). "பேதுரு, கொர்நேலியுவின் வீட்டாருக்கும், பெந்தெகொஸ்தே நாளன்று விசுவாசம் பெற்ற மூவாயிரம் பேருக்கும் இடையில் ஒப்புமை கூறவில்லை, மாறாக, கொர்நேலியுவின் வீட்டாருக்கும் (வ. 47) ஆதி சீஷர்களான அப்போஸ்தலர்களுக்குமிடையில்தான் அவர் ஒப்புமை கூறினார்" (இ.வ. 11:15; 15:8). பேதுரு, தாமும் மற்ற அப்போஸ்தலர்களும் பெற்றிருந்த பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற அதே "வரத்தை" (அவ்விடத்தில் நாம் "வரம்" என்கிற வார்த்தையைக் காண்கின்றோம்) கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் பெற்றிருந்ததாக வலியுறுத்தினார்.

*கொர்நேலியுவும் அவரது நண்பர்களும் பேசிய "பாஷை கள்" என்பது "பரவசப் பிதற்றல்கள்" அல்ல என்பதையும் அவர் கள் தங்கள் காலத்திலிருந்த மொழிகளையே பேசினார்கள் என்பதையும் இது தற்செயலாகவே கூறுகின்றது, ஏனென்றால், அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த "அதே வரத்தை" அவர்கள் பெற்றனர் - அப்போஸ்தலர்கள் தங்களின் நாட்களில் இருந்த மொழிகளைப் பேசினார்கள் (2:4, 6, 8).[12] புறஜாதியார் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு, யூத சாட்சிகள் இவ்வெளிப் படையான செயல்பாட்டைக் காண வேண்டியது அவசிய மாயிருந்தது.*

*"ஆதியிலே" என்ற வார்த்தையும் குறிப்பிடத் தக்கதாகும். அப். 10ன் நிகழ்ச்சியைப் பேதுரு, சில நாட்கள், வாரங்கள் அல்லது மாதங்களுக்கு முன்னதாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியுடன் ஒப்பிட முடியாதிருந்தது. அவர் அப். 2ல் நடந்த நிகழ்ச்சிக்கு, முந்திய பல வருடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியதாய் இருந்தது.*

> *புறஜாதியாரில் மனமாற்றமடைந்தவர்களின் அனுபவம் ஆதியில் அதாவது பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரைப் பெற்றுக் கொண்டவர்களின் அனுபவமாகவே இருந்தது என்ற உண்மையைப் பேதுருவின் விளக்கமானது வெளிக் கொண்டு வருகின்றது.[13]*

> *கொர்நேலியுவின் வீட்டில் நடந்த நிகழ்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டைக் காட்டுவதற்கு பெந்தெகொஸ்தே நாள் நிகழ்ச் சிக்குப் பேதுரு திரும்பிச் செல்ல வேண்டியதாயிருந்தது என்பது கவனிக்கத் தக்கதாகும்! இது, ''ஆவியானவரின் ஞானஸ் நானத்துடன்" (அப். 11:16) பாஷைகளில் பேசுவது என்பது ஆதி சபையில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாயிருந்ததில்லை[14] என்ற அற்புதமான ஆலோசனையை முன் வைக்கின்றது.*

*முன்பே குறிப்பிட்டபடி, அப். 2 மற்றும் அப். 10 ஆகியவற்றில் மட்டும்தான் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பற்றிய குறிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*கொர்நேலியு மற்றும் அவர் நண்பர்கள் ஆகியோர் மீது தேவன் ஏன் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தார்? இந்தப் புறஜாதியாரை இரட்சிப்பதே இதன் நோக்கம் என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மையாகாது என்பது தெளிவு. அப். 2ல்*

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற போது அது அவர்களை இரட்சிப்பதற்காக அருளப்பட வில்லை; அது போலவே அப். 10ல் கொர்நேலியுவின் வீட்டா ருக்கும் நடந்தது. தேவனுடைய நேரடியான செயல்பாட்டி னால் புறஜாதியார் இரட்சிக்கப்பட வேண்டியதாயிருந்தால், பேதுருவை அங்கு அனுப்பியிருக்க வேண்டியதே இல்லை. கொர்நேலியுவின் வீட்டார் ஆவியானவரின் வெளிப்படை யான பொழிதலின் மூலமல்ல, வசனத்தினாலேயே இரட்சிக்கப் படுவார்கள் என்று தேவனுடைய செய்தியாளர் கூறியிருந்தார் (11:14).

கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அருளப்பட்டது என்று ஒரு பரவலான கருத்து உள்ளது. இந்தக் கோட்பாட்டின்படி பார்த்தால், கொர்நேலியுவும் அவரது தோழர்களும் விசுவாசித்த உடனே இரட்சிக்கப்பட்டார்கள் என்றும், அதற்கு நிரூபண மாகவே தேவன் ஆவியானவரை அனுப்பினார் என்றும் ஆகின்றது. புறஜாதியார் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுமுன்பே ஆவியானவர் அவர்கள் மீது இறங்கினதால், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமல்ல என்று நிரூபிக்க இந்த அணுகு முறை சில நாமகரணக் கூட்டத்தாரால் பயன்படுத்தப் படுகின்றது.

இந்த நிலைப்பாட்டில் பல பிரச்சனைகள் காணப்பட முடியும். முதலாவது, ஆவியானவர் அவர்கள் மேல் வந்த நேரம் எது என்பதைச் சரியாகக் கூற நம்மால் முடியாது. நடந்தவற்றை "வரிசையாய்" பேதுரு அப். 11ல் கூறும்போது (11:4) அவர், "நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ... அவர்கள் மேலும் இறங்கினார்" (11:15) என்று கூறினார். புதிய நூற்றாண்டு மொழியாக்கத்தில் "நான் எனது பிரசங்கத்தைத் தொடங்கிய போது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார்" என்றுள்ளது. ஜீவனுள்ள வேதாகமத்தில் (Living Bible), "நான் எனது பிரசங்கத்தைத் தொடங்குவதற்குத் தயாரான போது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது இறங்கினார்" என்றுள்ளது. வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், இயேசுவானவர் புறஜாதியாருக்குச் செய்திருந்தது என்ன என்பதையும் அவர் மீது விசுவாசம் வைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும்

*கொர்நேலியுவுக்கும், அவரது வீட்டாருக்கும் பேதுரு பிரசங்கிப் பதற்கு முன்னதாகவே அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கியிருக்கச் சாத்தியக் கூறு உண்டு.*[15] *இப்படி நடந்திருந் தால், மேலே குறிப்பிடப்பட்ட அணுகுமுறையானது இரட்சிப் புக்கு ஞானஸ்நானம் அவசியமல்ல என்பதுடன், இரட்சிப்புக்கு விசுவாசமும் அவசியமல்ல என்று ஆலோசனை கூறுவதாய் இருக்கின்றது.*

*இந்த நிலைப்பாட்டைப் பற்றிய இன்னொரு பிரச்சனை என்னவென்றால், இந்த வரலாற்றில் உள்ள ஒரே ஒரு அற்புத வெளிப்பாட்டிற்கு இது அளவுக்கதிகமான வலியுறுத்தம் கொடுத்து, மற்ற எல்லாவற்றையும் ஏறக்குறைய பொருட் படுத்தாமல் விட்டுவிடுகின்றது. இரட்சிக்கப்படாத மக்கள் மீது தேவன் பரிசுத்த ஆவியானவரைப் பொழிய மாட்டார் என்பதே அடிப்படையான விவாதமாயிருக்கின்றது. அப்படிப் பார்த்தால், இரட்சிக்கப்படாத ஒரு மனிதரிடத்தில் தேவன் தூதரை அனுப்புவாரா? என்றும் விவாதிக்க வேண்டுமே! ஞானஸ்நானம் பெறுமுன்பு, ஆவியானவரை அனுப்பிய நிகழ்ச்சியானது ஞானஸ்நானம் அவசியமற்றது என்று நிரூபிக்குமானால், கொர்நேலியு, இயேசுவை விசுவாசிப்பதற்கு முன்பே, தூதன் அவருக்கு (கொர்நேலியுவுக்கு) தரிசனமான நிகழ்ச்சியானது விசுவாசம் அவசியமற்றது என்று நிரூபிக்கிற தாயிருக்குமே!*

*இந்த நிலைப்பாட்டின் முக்கிய பிரச்சனையாவது: பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது கொர்நேலியுவுக்கு இரட்சிப்பை அறிவிப்பதற்காகவே என்று வசனத்தில் எவ்விடத் திலும் சுட்டிக் காட்டப்படவில்லை. மாறாக, யூத கிறிஸ்தவர் கள் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ள அவர்களைத் தயார் செய்வதே இந்நிகழ்ச்சியின் நோக்கம் என்பது வசனப்பகுதியில் எல்லா வகையிலும் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஒரு விஷயத் தின் பயன்பாட்டை வைத்து நாம் அதன் நோக்கத்தை உறுதி செய்ய முடியும் (நான் இதற்கு முன் ஒரு நாற்காலியைப் பார்த்திருக்கவில்லையென்றாலும், அது பயன்படும் விதத்தைப் பார்க்கையில் என்னால் அதன் நோக்கத்தை விரைவாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்). மூன்று தனித்தனி நிகழ்ச்சி களில் (10:47, 48; 11:17; 15:8, 9) பேதுரு இந்த சம்பவத்தை, தேவன் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருந்தார்*

என்பதை நிரூபிக்கவும், சபையாரும் அவர்களை ஏற்றுக் கொள்ள மனதாயிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தவும் பயன்படுத்தினார். ஆகையால், அதுவே இந்த அற்புதத்தின் நோக்கமாயிருந்தது.

அப். 10ன் நிகழ்ச்சியைச் சிலர் "புறஜாதியாரின் உலகத்திற்குப் பெந்தெகொஸ்தே" என்று அழைத்திருக்கின்றார்கள், ஆனால் கொர்நேலியுவின் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகள் முதலாம் பெந்தெகொஸ்தேயின் அனுபவத்தின்படி பார்க்கையில், புறஜாதியார் பங்கேற்ற இரண்டாவது பெந்தெகொஸ்தேயாக அவ்வளவாய்க் காணப்படுவதில்லை, என புரூஸ் கூருகிறார். அப். 2ல் பேதுரு, "மாம்சமான யாவர்" மேலும் (2:17) ஆவியான வர் ஊற்றப்படுவார் என்று கூறுகையில் யோவேலை மேற்கோள் காட்டியிருந்தார். இந்த நிகழ்ச்சி (கொர்நேலியு வீட்டில் நடந்த நிகழ்ச்சி) வரையிலும் யூதர்கள் (மனித குலத்தின் ஒரு சிறு பகுதி) மட்டுமே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தனர்.[16] இப்பொழுதோ, புறஜாதியார் உலகத்தின் பிரதிநிதிகள்மேலும் ஆவியானவர் பொழியப்பட்டார்! தேவன் தாம் "பட்சபாத முள்ளவரல்ல" என்று அறிவித்தபோது, அது தவறற்ற சொற்றொடராகவே இருந்தது! கொர்நேலியுவின் மனமாற்றத் தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள் இன்றைக்கும் ஒவ்வொரு மனமாற்ற நிகழ்ச்சியிலும் நடைபெற வேண்டுமா? இல்லை. ஒரு தரம் தேவன் தமது கருத்தை விளங்கப் பண்ணி விட்டார், அதை அவர் மறுபடி மறுபடி செய்ய தேவையில்லை.

நாம் படிக்கும் வரலாற்றுக்கு நாம் மறுபடியும் திரும்பு வோம்: தேவன் தமது கருத்தை நிலைநாட்டுவதற்காக, பேதுருவின் பிரசங்கத்தின் போது ஏதோ ஒரு வேளையில், பேதுருவின் பிரசங்கத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். அப். 10:46ல் ஆறு யூத சாட்சிகளின் பதில்செயல் பற்றிக் கூறப்படுகின்றது: "பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசி கள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்." அந்த வேளையில் பேதுருவின் சிந்தனை ஓட்டம் பற்றி நாம் அப். 11:16, 17ல் பின்வருமாறு படிக்கின்றோம்: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர்

*சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன் ... நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியி ருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்.''*

## ஒரு நல்ல மனிதர் இரட்சிக்கப்படுகின்றார் (10:47, 48)

புறஜாதியார் பல பாஷைகளைப் பேசுவதைக் கண்டு பிரமித்துப்போயிருந்த ஆறு யூதசாட்சிகளிடத்தில் பேதுரு திரும்பி, *''நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா''* (10:47) என்று கேட்டார். கொர்நேலி யுவையும் அவரது வீட்டாரையும் ஏற்றுக் கொள்வதா அல்லது வேண்டாமா என்று வாக்களிக்கும்படி அவர்களிடம் பேதுரு கேட்கவில்லை. அது புரிந்துகொள்ளப்பட்ட பதிலையுடைய ஒரு சொல்திறன் மிகுந்த கேள்வியாக இருந்தது: அவர்களை ஞானஸ்நானப்படுத்த மறுப்பதென்பது தேவனை எதிர்த்து நிற்கும் செயலாகும்! அந்த ஆறு சாட்சிகளும் பதில் அளிக்கும் படி பேதுரு எதிர்பார்க்கவில்லை, அவர்களும் பதில் அளிக்க வில்லை. நடக்க வேண்டியிருந்ததெதுவோ, அதில் அவர்கள் தங்கள் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய தாயிருந்தது.

பேதுரு தமது முகத்தில் புன்னகை தவழ, இரு கரங்களையும் விரித்துக் கொர்நேலியுவினிடத்தில் திரும்பியிருப்பார் என்று நான் கற்பனை செய்கின்றேன். அவர்கள் இரட்சிக்கப்படுவதற் கேதுவான வார்த்தைகளைக் கூறுவதற்காகப் பேதுரு அனுப்பப்பட்டிருந்தார் (11:14); இப்பொழுது அவர் அந்த வார்த்தைகளைக் கூறி முடித்தார்: *''கர்த்தருடைய நாமத்தி னாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளை யிட்டான்*[17]'' (10:48அ). அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் *''அவருடைய நாமத்தினாலே''* பாவ மன்னிப்பைப் பெறுவான் என்று பேதுரு குறிப்பிட்டிருந்தார் (10:43). இப்பொழுது கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் ''இயேசு கிறிஸ்துவின் *நாமத்தினாலே''* ஞானஸ்நானம் பெற வேண்டிய தாயிருந்தது.

*கொர்நேலியுவும் மற்றவர்களும் ஏன் ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்கள்? சபையின் இயல்பைப் பற்றிப் புரிந்து கொள்ளாதவர்கள் சிலர், தங்கள் ஞானஸ்நானமானது (1) அவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் என்பதற் கான ஒரு அடையாளம் என்றும் (2) அது அவர்களை சபையின் ஒரு அங்கமாக்குகின்றது என்றும் கூறுகின்றார்கள். ஞானஸ் நானத்தை இவ்விதமாய்க் கண்ணோக்குபவர்கள், சபையானது இரட்சிக்கப்பட்ட மக்களால் ஆன சரீரமாயிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றார்கள்; ஒரு நபரை இரட்சிக்கின்ற ஞானஸ்நானமானது அவரை சபையின் உறுப்பினராகவும் ஆக்குகின்றது. இரட்சிக்கப்படுதலும், சபையின் உறுப்பினராகுதலும் ஒரே செயல்பாடாக உள்ளதே தவிர இரண்டல்ல.*

*“தேவன் பட்சபாதமுள்ளவரல்ல” என்று பேதுரு கூறும் போது, கொர்நேலியுவின் நண்பர்கள் ஞானஸ்நானப் படுத்தப் பட்டதன் நோக்கம் விவரிக்கப்பட்டது (10:34). அப். 2ல் யூதர்கள் என்ன காரணங்களுக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்களோ, அதே காரணங்களுக்காகவே அப். 10ல் புறஜாதியார் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். அவையாவன: (1) பாவமன்னிப்புக்காக, (2) பரிசுத்த ஆவியான வரை ஒரு வரமாகப் பெறுவதற்காக, (3) கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக (2:38, 41, 47).[18]*

*விசுவாசத்தின் அவசியத்தைப் பற்றிப் பேதுரு பேசிய உடன் அவர் இடைமறிக்கப்படாதிருந்தால் (வ. 43) தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களை ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படிக்குக் கட்டளையிட்டிருப்பார் (வ. 48). இந்த விபரமானது இயேசுவின் வார்த்தைகளுடன் முழுமையான இணக்கமுள்ளதாய் இருக்கின்றது: “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” (மாற். 16:16அ). கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் உள்ள பவுலின் போதனையை, இந்த நிகழ்ச்சி அழகாய் விளக்கப்படுத்து கின்றது: “நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்து வைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்று*

*மில்லை, ... நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:26-28).*

பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகவும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்கள்தான், வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த நாளில் செசரியாவில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள், ஆனாலும் கூட பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் இயேசுவுக்குள் முழுக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி உணர்வெழுச்சியுடையதாகவே இருந்தது! அவர்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது இவ்விடத்தில் மறைமுகமான கருத்தாக இருக்கின்றது; அப்படி நடந்த தென்றால், பிரசங்கியார் ஒருவர் கணிசமான ஒரு குழுவுக்குப் பிரசங்கித்து அவர்கள் எல்லோரும் மனமாற்றமடைந்ததாக அப். நட. புத்தகத்தில் கூறப்படும் ஒரே நிகழ்ச்சி இதுவே யாகும்!

இவ்வரலாறு பின்வரும் வார்த்தைகளுடன் முடிகின்றது: "அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்" (10:48ஆ). புதிய கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றி அதிகம் கற்றுக் கொள்ள விரும்பினார்கள். பேதுருவும் சந்தோஷத்தோடு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கினார். மக்களுக்கு சுவிசேஷம் போதிக்கப்பட்டு, ஞானஸ்நானப்படுத்தப்பட்ட பிறகு, அவர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு உபதேசம் பண்ணவேண்டுமென்று இயேசு கட்டளையிட்டிருந்தா ரல்லவா (மத். 28:19, 20)? ஆயினும், விரிவான போதனைக்காக என்பதைவிடவும் மேலான மற்ற சில விஷயங்களுக்காகவும் அவர்கள் அங்கே தங்க வேண்டியதாயிருந்தது. யூதர்/ புறஜாதியார் ஐக்கியமானது இன்னமும் வலுக்குறைந்ததாகவே இருந்தது; அதை பலப்படுத்த வேண்டியிருந்தது. கொர்நேலியு வின் வீட்டு நுழைவாயிலைக் கடந்து சென்றபோது, பேதுரு ஒரு முக்கிய நடவடிக்கையைச் செய்தார். இப்பொழுது அவர் பல நாட்கள் புறஜாதியாருடன் அந்த வீட்டில் தங்கி-புறஜாதியார் உண்பவைகளையே தாமும் உண்டிருந்தார்! (11:3). அவர் தமது வாழ்க்கையிலேயே முதல்முறையாகப் பன்றியிறைச்சியை மதிய உணவில் உண்டிருந்திருப்பார்! அப்படியிருந்தால், அதை முதல் கடி கடிக்கையில் அவர் திணறியிருப்பார் - ஆனால் அவர் அதைச் சமாளித்து விழுங்கியிருப்பார் என்று நான் உறுதியாய்க்

கூறமுடியும்! யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையில் இருந்த தடைகள் யாவும் தகர்ந்து வீழ்ந்தது!

## முடிவுரை

கொர்நேலியுவின் மனமாற்ற வரலாற்றைப் படிக்கையில், அதில் இணைந்துள்ள கண்கண்ட அற்புதத்திலேயே நீங்கள் இலயித்திருந்து விட வேண்டாம். ஒவ்வொரு மனமாற்றத்திலும் நிகழ்ச்சிகளும், இன்றியமையாதவைகளும் இருக்கின்றன. நிகழ்ச்சிகள் என்பது அந்த மனமாற்ற சம்பவத்திற்கு மட்டுமே தனிப்பட்ட விதத்தில் உரியவையாகும்; இன்றியமையாதவை என்பவையோ மனமாற்றத்தின் மையமாக, இரட்சிப்புக்கு அவசியமானவையாக இருக்கின்றன. நிகழ்ச்சிகள் என்பது சம்பவத்திற்குச் சம்பவம் மாறுபடக் கூடியவையாகும்; இன்றியமையாதவைகளோ ஒரே மாதிரியாகவே நிலைத்திருக் கின்றன.[19] தேவன் "பட்சபாதமுள்ளவரல்ல"; அவர் மனிதர் களுக்கிடையில் "வேறுபாடு" காட்டுபவரல்ல (10:34; 15:9). அதற்குமுன் ஒவ்வொரு நபரும் எவ்விதம் இரட்சிக்கப் பட்டிருந்தாரோ, அதே வழியில் தான் கொர்நேலியுவும் அவரது நண்பர்களும் இரட்சிக்கப்பட்டார்கள். அதற்குப் பின்னும் அவ்விதமே ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் விசுவாசித்து (10:43; 15:11),[20] மனந்திரும்பி (11:18), ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது (10:48). அவ்வித மாகவே அவர்கள் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப் பட்டனர் (15:11); அவ்விதமாகவே நீங்களும் நானும் தேவனு டைய கிருபையினால் இரட்சிக்கப்பட முடியும்!

நீங்கள் இவ்விதமாய்க் கர்த்தருக்குப் பதில் கொடுத்திருக்க வில்லையென்றால், அதை இப்பொழுதே ஏன் செய்யக் கூடாது?

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இந்தப் பாடத்தை முடிக்கும் தறுவாயில், எளிய புறக்குறிப் பாகப் பின்வரும் சுருக்கத்தை நீங்கள் கரும்பலகையில் எழுத விரும்பலாம்:

கொர்நேலியு எவ்விதம் இரட்சிக்கப்பட்டார்?

*அவரது நல்ல வாழ்க்கையினாலா? இல்லை.*
*அற்புத வெளிப்பாடுகளினாலா? இல்லை.*
*கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினாலா? ஆம்.*
*வசனத்தைக் கேட்டல் (11:14)*
*விசுவாசித்தல் (10:43)*
*மனந்திரும்புதல் (11:18)*
*ஞானஸ்நானம் பெறுதல் (10:48)*
*அவர் கிருபையினால் இரட்சிக்கப்பட்டாரா? ஆம்! (15:11).*

*அமெரிக்காவில் வசிப்பவர்களுக்கு,* Uncle Sam *சுவரொட்டி யானது "நீங்கள் எனக்குத் தேவை" என்று கூறுகின்றது. இது முடிவில் காட்டக் கூடிய நல்ல காட்சி உதவிப் பொருள் ஆகும். ஒருவேளை, படைக்கு ஆள் சேர்க்கும் பிரிவில் பணியாற்றும் ஒருவர் உங்களுக்கு இந்தச் சுவரொட்டியைக் கொடுத்து உதவக் கூடும். ஒருவேளை அப்படி முடியவில்லையென்றால், வரை படக் கலைஞர் யாரேனும் இதை வரைந்து கொடுக்கவும் முடியும்.*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*நல்ல பேச்சாளர் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமாக நல்ல கேட்பவர்களும் இருந்தால்தான் நல்ல பிரசங்கமாக அமையும் என்பதைப் பலர் உணர்வதில்லை. பேசுபவரைக்காட்டிலும், கேட்பவர்களே பல வழிகளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகின்றார்கள். 10:33 வசனமானது "மிகச் சிறந்த முறையில் கேட்பவர்கள்" என்ற கருத்தைப் பிரசங்கிக்கப் பயன்படுத்தப்படலாம்: (1) "நாங்கள் எல்லாரும் இங்கே இருக்கின்றோம்." ஒவ்வொரு கூட்டத்திலும் இது உண்மையாயிருந்தால் எப்படியிருக்கும் (எபி. 10:25)! கொர்நேலியு செய்ததைப் போலவே இங்குள்ள நாம் ஒவ்வொருவரும் நமது நண்பர்களை அழைத்து வருவது எவ்வளவு ஒரு விருப்பமுள்ள செயலாகும்! (2) "தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்" நாம் எல்லாருமே, தேவ சமூகத்தில் நாம் கூடியிருப்பதையும் நாம் செய்யும் ஒவ்வொன்றையும் அவர்*

பார்க்கின்றார் என்பதையும் புரிந்து கொள்வது அவசியமாகும் (மத். 18:20; 1 கொரி. 5:4). நம்மை நாமே பிரியப்படுத்திக் கொள்வதல்ல, தேவனைப் பிரியப்படுத்துவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும்! (3) "கேட்கும்படிக்கு." தேவனுடைய வசனத்திலிருந்து ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப்படும் போது, அங்கு பார்வையிடுவதோ அல்லது பொழுது போக்குவதோ இல்லாமல், அதைக் கவனித்துக் கேட்க வேண்டும். செய்தித் தொடர்பின் செயல்முறைக்கு, நல்ல முறையில் கேட்பவர்கள் மிகவும் அவசியம். (4) "தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும்." நாம் எதைக் கேட்க விரும்புகின்றோமோ அதுவல்ல, ஆனால் தேவன் கட்டளையிட்டிருப்பவைகளை நாம் கேட்பதே நல்ல பிரசங்கமாக இருக்க முடியும் - அவர் கட்டளையிட்டதில் ஒரு பகுதியல்ல, ஆனால் அவர் கட்டளையிட்ட *யாவையும்* கேட்க வேண்டும்!

இப்பாடத்தில் கொர்நேலியுவின் மனமாற்ற நிகழ்ச்சியில் உள்ள அம்சங்களின்மேல் கவனம் செலுத்துவதற்காக வேண்டி, பேதுருவின் பிரசங்கம் சுருக்கமாகக் காணப்பட்டது. இதில் உள்ள பேதுருவின் பிரசங்கமானது மிகச் சிறந்த ஒரு துணைப் பாடமாக அமையும். அப்படிப்பட்ட ஒரு பாடத்திற்காகவே (அதை நீங்கள் மற்றவர்களுக்குத் தர வேண்டும் என்பதற்காகவே) அவரது பிரசங்க வசனப் பகுதிகளுக்கு பல அடிக் குறிப்புகளை நான் கொடுத்திருக்கின்றேன்.

---

குறிப்புகள்

[1]ரோமப்படையில் பரிதானம் (இலஞ்சம்) என்பது ஒரு வாழ்க்கை முறையாகவே இருந்தது, ஆனால் இப்படிப்பட்ட ஊழல் எல்லாவற்றிற்கும் மேலாக கொர்நேலியு தம்மை உயர்த்தியிருந்தார். [2]கொர்நேலியு தம்மைப் பணிந்து வணங்கிய காரணத்தைப் பேதுரு விசாரித்து அறிந்து அதன் பிறகு, "நீங்கள் என்னைத் தேவனுடைய *பிரதிநிதி* என்று புரிந்து கொண்டால், இது சரியானதே" என்று கூறவில்லை. பேதுரு உடனடியாக தவறற்ற சொற்றொடரில் கொர்நேலியுவிடம் எழுந்திருக்கும்படி கூறினார்! [3]வெளி. 19:10; 22:8, 9ஐக் காணவும். நான் ரோமாபுரிக்குச் சென்று, உலோகத்தினால் செய்யப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருக்கும் பேதுருவின் சிலையைப் பார்த்திருக்கின்றேன். மூட நம்பிக்கையுள்ள மக்கள் தொடர்ந்து முத்தமிடுவதால் அச்சிலையின் பாதங்கள் தொடர்ந்து சிதைகின்றன. பேதுருவுக்கு வாயிருந்தால் இதைக் கண்டு திகைத்துப் போயிருப்பார்! தேவனுக்கு மட்டுமே கூறவேண்டிய சொற்களைத் தம் மீது கூற அனுமதிக்கும் தேவ ஊழியர் எவர் ஒருவருக்கும் இப்பாடம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்!

சபையில் வேறு யாரைக் காட்டிலும் மிக உயர்ந்த "பணியை"ச் செய்தவர் பேதுரு (அப்போஸ்தல நிலை) - ஆனாலும் கொர்நேலியு பணிந்து கொண்டதை அவர் அனுமதிக்கவில்லை. [4]வசனம் 28ல் உள்ள வார்த்தைகளானது, அங்கிருந்த புறஜாதியாருக்குப் பயன்படுவதைக் காட்டிலும், பேதுருவுடன் வந்திருந்த ஆறு யூத சகோதரர்களுக்கு அதிகம் பயன்படும்படியாகக் கூறப்பட்டது. அங்கு கூடியிருந்தவர்களில் பலர் கொர்நேலியுவைப் போலவே "தேவ பக்தி" யுள்ளவர்களாயிருந்து, ஜெபாலய ஆராதனையில் கலந்திருக்கலாம். அவர்கள் யூதப் பாரம்பரியம் மற்றும் நியாயப் பிரமாணம் ஆகியவற்றை அறிந்தவர்களாய் இருக்கலாம். [5]பேதுரு தம்முடன் செசரியாவுக்குப் பிரயாணமாய் வந்த செய்தியாளர்களிடமிருந்து, இயேசுவைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தார்கள் என்று தெரிந்து கொண்டிருக்கலாம், அல்லது பின்வரும் காரணங்களினால் அவர்களிடத்தில் இயேசுவைப் பற்றிய அடிப்படை அறிவு இருந்திருக்கும் என்று அவராகவே யூகித்திருக்கலாம்: (1) அவர்கள் எருசலேமில் இருந்து எழுபது அல்லது அதற்கும் குறைவான மைல்கள் தூரத்திலேயே வாழ்ந்து வந்தார்கள், (2) இயேசு விரிவான பிரயாணம் செய்திருந்தார், மற்றும் (3) பிலிப்பு, செசரியாவில் நிச்சயம் பிரசங்கித்திருப்பார். இயேசு செய்திருந்தவைகளில் சிலவற்றை அவர்கள் அறிந்திருக்க வேண்டும், ஆனாலும் இப்போது பேதுருவால் அதிகம் போதிக்க முடியும். [6]இயேசு, யோவானால் ஞானஸ்நானம் பெற்றபோது, தேவன் அவரை (இயேசு) பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணியிருந்தார் (லூக். 3:21, 22; 4:18, 19). "தேவன் அவரை அபிஷேகம் பண்ணினார்" என்று கூறுவது, "தேவன் அவரை மேசியாவாக்கினார்" என்று கூறுவதாகும். [7]யோவான் 3:2. [8]வேதவசனங்களில் எப்போதாவது சில இடங்களில், சரீர சுகவீனங்கள் சாத்தானின் முகமையாகக் கூறப்படுகின்றன (லூக்கா 13:16; 2 கொரி. 12:7; யோபுவின் புத்தகம்). ஆனால் இது, ஒவ்வொரு வியாதிக்கும் சாத்தானே காரணம் என்றோ அல்லது வியாதிப்படுவதில் எந்த மதிப்பும் கிடையாதென்றோ அர்த்தப்படாது (சங். 119:67, 71). "பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குதல்" என்பதில் சாத்தானின் ஆளுகையில் இருந்தவர்களின் சிந்தைகளைக் குணப்படுத்திய ஆவிக்குரிய குணமாக்குதல்களும் உள்ளடங்கியிருக்கக் கூடும். [9]சரீர உயிர்த்தெழுதலை மிக நிச்சயமாய் நம்பச் செய்யும் ஆதாரங்களில் ஒன்றாக லூக்கா இதைக் கருதினார் (லூக். 24:41-43). தரிசனத்தில் காணும் அல்லது சரீரமற்ற ஒரு உருவமானது மீனை உண்ண முடியுமா? [10]அப். 17:31; 2 தீமோ. 4:1; 1 பேது. 4:5.

[11]தேவன் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ளும் தம் விருப்பத்தைப் பேதுருவின் மூலம் அறிவித்தபடியினால் அவர்கள் தேவனை "புகழ்ந்திருக்கலாம்!" [12]பெந்தெகொஸ்தே நாளன்று நடந்தது போலவே, இவர்கள் பேசுவதைக் கேட்டவர்களும், இவர்கள் பேசியது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது, ஏனென்றால் இவ்விரு நிகழ்ச்சிகளின் போதும், பாஷைகளைப் பேசியவர்கள் என்ன பேசினார்கள் என்பதைக் கேட்டவர்கள் புரிந்து கொண்டார்கள் (2:11; 10:45). [13]I. Howard Marshall, *விளக்குகிறார்.* [14]Warren W. Wiersbe, *விளக்குகிறார்.* [15]பேதுரு புறஜாதியாருக்குப் பிரசங்கிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்று யூத சாட்சிகளை நம்பச் செய்ய வேண்டிய தேவை இருந்தது என்பதற்குச் சாத்தியக் கூறுண்டு. [16]தொடக்கமாக, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தனர்; அடுத்த நிலையாக, அப்போஸ்தலர்கள், மற்றவர்களின் மீது கைகளை வைத்து ஜெபித்தனர் (8:18). ஞானஸ்நானம் பெற்றிருந்த யாவரும் ஆவியானவரின் (அற்புதமல்லாத) சாதாரண வரத்தைப் பெற்றனர் என்றும் கூட நாம் கூற முடியும்; இந்நிகழ்ச்சி வரையிலும், யூதர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். [17]"அவன் அவர்களுக்குக்

கட்டளையிட்டான்”; KJV. இது கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்குமான கட்டளையென்று பல மொழிபெயர்ப்பாளர்கள் நம்புகின்றனர். ஆயினும், மூல வசனத்தில் அங்கிருந்த ஆறு யூத கிறிஸ்தவர்களும் கொர்நேலியு மற்றும் அவரது நண்பர்களை ஞானஸ்நானப் படுத்தும்படி கட்டளை பெற்றார்கள் என்றுதான் மொழிபெயர்ப்புச் செய்ய முடிகின்றது. அப்போஸ்தலர்கள் தாங்கள் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைத் தவிர்த்தல் என்பதை நியதியாகக் கொண்டிருந்தனர், இது பிரிவினைகள் ஏற்படாமலிருக்க வழி வகுத்தது (இ.வ. 1 கொரி. 1:14, 15). [18]அப். 10ல் இருந்து, தேவன் மக்களின் இரட்சிப்பிற்கு புதிய சட்டங்களை வகுத்தாரென்று சிலர் கூறுகின்றனர் - ஆகையால், “யூதர்கள் மற்றும் ஆதிக் கிறிஸ்தவத்திற்குப்” பொருந்தியிருந்த அப். 2:38 இன்றைய நாட்களில் நமக்குப் பொருந்தாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள், 10:34, 35 மற்றும் 15:9 ஆகியவற்றைக் கவனிக்கத் தவறுகின்றனர். கிறிஸ்தவத்தின் தொடக்கத்தில் இருந்தே ஒவ்வொரு நபரும் ஒரே விதமாகவே இரட்சிக்கப்பட்டுள்ளனர்! [19]“அப். நட. 1” இதழில் தரப்பட்ட மனமாற்றங்கள் பற்றிய அட்டவணையானது, அதன் முக்கிய அம்சங்கள் என்ன என்பதைக் காண்பதையும் அதன் நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டதாகும். மனமாற்றம் பற்றிய விரிவான விளக்கங்களில் இம்முக்கிய அம்சங்களின் கூறுகள் மறுபடி மறுபடி வந்து கொண்டேயிருக்கும். [20]முன்பே குறிப்பிட்டபடி, இருதயத்தில் உள்ள விசுவாசமானது, வாயினால் விசுவாசத்தை வெளிப்படுத்துவதைத் துணையாகப் பெற்றிருக்கும் (ரோமர் 10:9, 10).